**O.S.No. 176/2022 நாள் 28.08.2026 DW 1 – திரு. சிவசுப்பிரமணியன்**

(சாட்சி மீண்டும் உதவியாளரால் பிரமாணம் செய்யப்பட்டு அனுமதியின்பேரில் தொடர்ந்து முதல்விசாரணை செய்யப்படுகிறார்.)

முதல்விசாரணை தொடர்ச்சி

எனது பெயரில் உள்ள பட்டா பாஸ்புத்தகம் எண். 323176 பி.வா.சா.ஆ–1, தாவா சொத்துக்களுக்கு முத்துசாமி ஆன எனது அப்பா மற்றும் எனது மற்றும் எனது மனைவி பெயரில் உள்ள பட்டா இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டது (எண்ணம் 6) பி.வா.சா.ஆ–2 வரிசை.

குறுக்குவிசாரணை (வாதிதரப்பில்)

பி.வா.சா.ஆ–2 வரிசை ஆவணங்களில் சொல்லக்கூடிய முத்துசாமி மற்றும் முத்துசாமி குடும்பர் என்ற இரண்டு பெயர்களும் என் அப்பாவை குறிக்ககூடியது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ–2 பட்டாக்கள் வரிசையில் என் பெயரிலும், என் மனைவி பெயரிலும் பெயர் மாற்றம் செய்வதற்கு முன்பு எனது சகோதரரான வாதிக்கும், எனது சகோதரியான 3ம் பிரதிவாதிக்கும் வட்டாட்சியர் அறிவிப்பு அனுப்பி விசாரணை மேற்கொண்டு என் பெயரில் தனிபட்டா மாறுதல் உத்தரவு பிறப்பிக்கவில்லை என்றால் சரிதான். நான் எதிர்வழக்குரையில் எனது தாயார் உயிருடன் இருக்கும் காலத்தில் வாய்மொழிபாகபிரிவினை நடந்ததாக சொல்லியுள்ள நிலையில் எந்த வருடம் யார் முன்னிலையில் அவ்வாறு வாய்மொழி பாகப்பிரிவினை நடைபெற்றது என்பதை குறிப்பாக எதிர்வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான், என் மாமா காளபெருமாள் முன்னிலையில் நடந்தது. எனது தாய்மாமா காளபெருமாள் எங்கே குடியிருக்கிறார் என்றால் அவர் இறந்துவிட்டார். எந்த வருடம் இறந்தார் என்றால் இன்றைய நாளிலிருந்து சுமார் 6,7 வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டார். உண்மையிலேயே எனது தாய்மா காளபெருமாள் முன்னிலையில் பாகப்பிரிவினை நடந்திருந்தால் எதிர்வழக்குரையிலேயே

குறிப்பிட்டு சொல்லியிருப்பேன் என்றாலும், தற்போது எனக்கு வழங்கப்பட்ட ஆலோசனையின்பேரில் உண்மைக்கு மாறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அங்கமங்கலம் கிராம புல எண். 10/1, 10/2 ஆகிய இரண்டு சர்வே எண்களில் உள்ள சொத்துக்கள் இந்த அசல்வழக்கில் வாதியால் சேர்க்கப்படவில்லை என்று நான் கட்சி செய்து வருகிறேன் என்றால் இல்லை. அங்கமங்கலம் கிராம சர்வே எண். 10/1 ல் உள்ள 68.50 ஏர் மற்றும் புல எண். 10/2 ல் உள்ள 34.50 ஏர் நஞ்சை நிலங்கள் எனது தகப்பனாருக்கு பாத்தியப்பட்டது என்பதை காண்பிப்பதற்கு எந்த ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அதனால் எனது கூற்றுப்படி அங்கமங்கலம் கிராம சர்வே எண். 10/1,10/2 ல் உள்ள சொத்துக்களுக்கும், தாவா சொத்துக்களுக்கும் சம்மந்தமில்லை என்றுசொன்னால் சரியல்ல. 14.10.2008 தேதியில் எனது மனைவிக்கு நான் எழுதிக்கொடுத்த என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ–14 ஆவணத்தில் எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளபடி குடும்பத்தினருக்குள் வாய்மொழி பாகம் ஏற்பட்டு அதன்படி கிடைக்கப்பட்டதாக சொல்லப்படவில்லை என்றால் சரிதான். ஆனால் பேசிமுடிக்கப்பட்டது. எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளதுபோல் தாவா சொத்துக்களில் எனது சகோதரர் வாதிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள சொத்துக்களின் மதிப்பு என்ன என்ன, எனக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டதாக சொல்லப்படக்கூடிய சொத்துக்களின் மதிப்பு என்ன என்பதை காண்பிப்பதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எதிர்வழக்குரையில் பத்தி 4 ல் 3ம்பிரதிவாதியான எனது சகோதரிக்கு நகை சீர்சிராட்டுக்கள் செய்து திருமணம் நடத்தி வைத்ததாகவும், அதுபோக அங்கமங்கல கிராம சர்வே எண். 10/2 ல் 20 குருணி வயல் 3ம் பிரதிவாதி பாகத்திற்கு கொடுக்கப்பட்டதாகவும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எவ்வளவு

நகை போட்டோம் என்றும், என்ன என்ன சீர் செய்தோம் என்றும் சொல்லவில்லை என்றால் சரிதான், 40 பவுன் நகையும், 40 ஆயிரம் ரொக்கமும் கொடுத்தோம். அங்கமங்கலம் சர்வே எண். 10/2 ல் 20 குருணி வயல் 3ம் பிரதிவாதிக்கு வழங்கப்பட்டது என்பதை காண்பிப்பதற்கு எந்த ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அதனால் நகை, சீர்சிராட்டுக்கள் செய்தததின் காரணமாக 3ம் பிரதிவாதிக்கு பாகம் கிடைக்கத்தக்கதல்ல என்று நான் கட்சி செய்வது சட்டபிழை உடைய வாதம் என்று சொன்னால் சரியல்ல. நான்சொல்வதுபோல் வாதிக்கும், 3ம் பிரதிவாதிக்கும் தாவா சொத்துக்கள் எதுவும் வாய்மொழி பாகப்பிரிவினை அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட்டு கொடுக்கப்படவில்லை என்றுசொன்னால்சரியல்ல. அவ்வாறு ஒதுக்கீடு செய்யப்படவில்லை என்பதால்தான் வாதிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டதாக சொல்லப்படுகின்ற சொத்துக்களும் எனக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டதாக சொல்லப்படுகின்ற சொத்துக்களும் சமமான மதிப்புடையவை என்பதை காண்பிப்பதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ–1 பட்டா பாஸ்புத்தகம் வட்டாட்சியரால் முறையாக விசாரணை செய்யப்பட்டு வழங்கப்படவில்லை என்பதினால் அது வாதியின் உரிமையை கட்டுப்படுத்தாது என்று சொன்னால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் ஆவணம் 04.07.2024 அன்று எனது மனைவி, முத்துமகாராஜா என்பவருக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணத்தின் சார்பதிவாளர் அலுவலக நகல் என்றால் சரிதான், மேற்படி ஆவணம் **வா.சா.ஆ– 15** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி கிரைய ஆவணம் நாங்கள் அனைவரும் பேசிமுடித்தபின்பு பட்டா பெற்று கிரையம் கொடுக்கப்பட்டது. வா.சா.ஆ–15 ஆவணத்தில் சொத்தின் உரிமை மூலம் சம்மந்தமாக நான், 14.10.2008 ல் எனது மனைவிக்கு எழுதிக்கொடுத்த

கிரைய ஆவணம் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ–15 கிரைய ஆவணம் இந்த நீதிமன்றத்தில் வாதி வழக்கு தாக்கல் செய்து நீதிமன்றத்திலிருந்து அறிவிப்பு வந்தபின்பு அதற்கு பிறகு எனது மனைவியால் எழுதிக்கொடுக்கப்பட்டது என்றால் சரிதான், ஆனால் அதற்கு முன்பாகவே எனது மனைவிக்கு நான் மாற்றி கொடுத்துவிட்டேன். எனது தாய்மாமாவின் இறப்பு சான்றிதழை வழக்கில் தாக்கல் செய்ய தயாராக இருக்கிறேன் என்றால் சரிதான். வா.சா.ஆ–15 ஆவணத்தில் சொத்தின் அமைப்பு பூமியில் திறந்தவெளியாக இருப்பதாகத்தான் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் கட்டிடங்கள் எதுவும் இல்லை. எதிர்வழக்குரையில் சொல்லியுள்ள பண்ணைவீடு சம்மந்தப்பட்ட தீர்வை ரசீதுகள், மின்இணைப்பு ரசீதுகள், குடிநீர் கட்டணம் செலுத்திய ரசீதுகள் எதையும் எனது தரப்பில் ஆவணங்களாக தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளபடி வழக்கு தபசில் 1,2,3 ல் தெற்கடைய 1 ஏக்கர் நிலத்தில் எனது பெயருக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் நான் வீடு கட்டியதாக சொல்வது உண்மையல்ல என்றால் சரியல்ல. எதிர்வழக்குரையில் சொல்வதுபோல வாய்மொழியான பாகப்பிரிவினை எதுவும் நடைபெறவில்லை என்றுசொன்னால் சரியல்ல. எதிர்வழக்குரையிலேயே வாய்மொழி பாகப்பிரிவினை என்பதால் அதற்கு ஆதாரங்கள் இல்லை என்றுதான் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அதனால் எந்த தேதி, எந்த மாதம், எந்த வருடம் யார் முன்னிலையில் வாய்மொழி பாகப்பிரிவினை நடைபெற்றது என்பதை எதிர்வழக்குரையில் சரியாக சொல்லாமல் அந்த வாய்மொழி பாகப்பிரிவினை நடந்தபிறகு இரண்டாவதாக மீண்டும் பாகப்பிரிவினை கேட்டு வாதி வழக்கு செய்ய முடியாது என்று கட்சி செய்வது சட்டபிழை உடைய வாதம் என்றுசொன்னால் சரியல்ல. வாதி இந்த நீதிமன்றத்தில்

கேட்டுள்ளபடி அவருக்கும், 3ம் பிரதிவாதியான எனது உடன்பிறந்த சகோதரிக்கும் பிராது தபசில் சொத்துக்களில் பாகவீதம் கொடுத்திட நான் கடமைப்பட்டவர் என்றுசொன்னால் சரியல்ல. எனக்கு உரிமைமூலம் கிடைத்திருக்காத நிலையில் பாகவீத உரிமை ஏற்படாத சொத்தை பொறுத்து நான், எனது மனைவிக்கு எழுதி வைத்த கிரைய ஆவணம் சட்டப்படி செல்லாது என்றுசொன்னால் சரியல்ல. பிராதுபடி தீர்ப்பு வழங்கப்பட வேண்டும் என்றுசொன்னால் சரியல்ல. நான் சொல்வதுபோல் வாய்மொழி பாகப்பிரிவினை எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

2ம் பிரதிவாதிதரப்பில் ஆஜர் இல்லாததால் குறுக்குவிசாரணை இல்லை என முடிக்கப்பட்டது.

BREETHA M — Digitally signed by BREETHA M